# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.46/2022** **நாள் : 11.09.2022**

**மீஞ்சூரில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் 13.09.2022 அன்று காலை 6 மணி முதல் 15.09.2022 அன்று காலை 10 மணி வரை மேற்கொள்ளப்பட உள்ளதால் மாற்று ஏற்பாடாக பகுதி–1, 2, 3 மற்றும் 4–க்கு உட்பட்ட பகுதிகளுக்கு புழல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் வழங்கப்படும்**

## சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்

மீஞ்சூரில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் 13.09.2022 அன்று காலை 6 மணி முதல் 15.09.2022 அன்று காலை 10 மணி வரை மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே, மாற்று ஏற்பாடாக மாதவரம், மணலி, திருவொற்றியூர், எர்ணாவூர், கத்திவாக்கம், பட்டேல் நகர், வியாசர்பாடி ஆகிய பகுதிகளுக்கு புழல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் வழங்கப்படும்.

மேலும், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பகுதிப் பொறியாளர்/பகுதி - 1 | கைபேசி எண்.8144930901 | திருவொற்றியூர், எர்ணாவூர், கத்திவாக்கம் |
| பகுதிப் பொறியாளர்/பகுதி - 2 | கைபேசி எண்.8144930902 | மணலி |
| பகுதிப் பொறியாளர்/பகுதி - 3 | கைபேசி எண்.8144930903 | மாதவரம் |
| பகுதிப் பொறியாளர்/பகுதி - 4 | கைபேசி எண்.8144930904 | பட்டேல் நகர், வியாசர்பாடி |
| தலைமை அலுவலகம் (சிந்தாதிரிப்பேட்டை) | 044–2845 1300, 044 - 4567 4567 (புகார் பிரிவு) | |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்